DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-228/2022

Prosecution witness - PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.பொங்கல்செல்வி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused absent. Petiton u/s.317 Cr.P.C filed and allowed.)

20.01.2026- 03.45 PM

முதல் விசாரணை:-

1. நான் பெரியகுளம் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். எதிரி முருகவேலை தெரியும், எங்கள் ஊரைச் சேர்ந்தவர். பட்டியல் சாட்சிகள் 3 மற்றும் 4 ஐ தெரியும். ரவீந்திரன், நமச்சிவாயம் ஆகியோர்களைத் தெரியும். எனக்கு உறவினர்கள்.

2. சம்பவம் தினம் தற்போது ஞாபகமில்லை. சம்பவ தினத்திற்கு சுமார் 1 மாதத்திற்கு முன்பு ஊருக்கு ஒதுக்குபுறமாக சுமார் 2 1/2 ஏக்கர் நிலத்தில் கடலை போட்டு இருந்தோம். அதில் எதிரி முருகவேலின் மாடுகள் மேய்ந்து விட்டது அது சம்மந்தமாக முருகவேலுவை நானும், எனது கணவரும் அவருயை வீட்டிற்கு போய் சத்தம் போட்டு வந்தோம். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் போட்டிருந்த கடலை புஞ்சையை பார்த்துவிட்டு திரும்ப பெரியகுளம் பேருந்து நிறுத்தம் அருகே வந்து கொண்டிருந்தோம்.

3. அப்போது எதிரி முருகவேல் எனது கணவரை இடது கணுக்காலில் கத்தி, கம்பால் வெட்டி விட்டார். பின்னர் எனது கணவரின் வலது புருவத்தில் கத்தி, கம்பால் வெட்டி விட்டார். நான் எனது கணவரை காப்பாற்ற முயன்ற போது கத்தி, கம்பின் பின்பகுதியால் எனது முதுகில் அடித்து விட்டார். பின்னர் ரவீந்திரனும், நமச்சிவாயமும் ஓடி வந்து விலக்கிவிட்டார்கள். பின்னர் நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டு காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் எனது கணவர் புகார் மனு கொடுத்தார். பின்னர் காவல் நிலையத்தில் இருந்து எங்களை இராமநாதபுரம் அரசு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இராமநாதபுரம் அரசு மருத்துவனையில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருந்து மட்டும கொடுத்தார்கள். அங்கே எனது கணவர் ஒரு வாரமாக சிகிச்சையில் இருந்தார். போலீசார் மருத்துவமனையில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

4. சம்பவம் நடந்த உடன் மருத்துவமனைக்கு சென்றோமா அல்லது காவல் நிலையம் சென்றோமா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றோம். காவல் நிலையத்தில் புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று எங்களிடம் படித்து காண்பித்தார்களா என்றால் நாங்கள் தான் காவல் நிலையத்திற்கு முன்னர் இருந்த நபரிடம் புகார் மனு எழுதிக்கொடுத்தோம். கடலையில் மாடு மேய்ந்தது சம்மந்தமாக எதிர்க்கும் எங்களுக்கும் பிரச்சனை இருந்தது என்றால் ஒரே ஒரு முறை மாடு மேய்ந்தது என்று பிரச்சைன இருந்து. அந்த பிரச்சனை சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து சம்பவத்தை நேரில் பார்த்தாக சொன்ன சாட்சிகள் வந்தார்கள் என்றால என்னுடைய சத்தம் கேட்டு 5 நிமிடத்திற்குள் வந்தார்கள்.

5. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் கிகிச்சை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். எனது கணவர் ஒரு வாரமாக சிகிச்சையில் இருந்தார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையின் போது கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது கணவர் இருசக்கர வாகனத்தில் வரும் போது நான் கூட வரவில்லை என்றால் இரண்டு பேரும் நடந்து தான் வந்தோம். 10 அடி துாரத்தில் வந்தோமா என்றால் கூடுதலாக இருக்கும். துாரமாக நடந்து வந்ததால் அவரை தாக்கியது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர் எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் கடலை புஞ்சையில் செல்லும் போது தவறி முள்வேலியில் விழுந்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி